# 12 ஆம் வகுப்பு – கணினி பயன்பாடுகள்

## பாடம் 8. படிவங்கள் மற்றும் கோப்புகள்

PREPARED BY,

J. KAVITHA, B.SC,B.ED, M.C.A,M.PHIL.,

COMPUTER INSTRUCTOR GR - I,

GHSS, S.S.KULAM,

COIMBAORE.

# கற்றலின் நோக்கங்கள்

- வலை பயன்பாடுகளில் HTML படிவங்களின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ளுதல்.
- PHP-ல் உள்ள கோப்பு கையாளுவதில் உள்ள நுட்பத்தை பற்றி தெரிந்து கொள்ளுதல்.
- வலை சார்ந்த கோப்பு மேலாண்மை அமைப்பின் அடிப்படையினை தெரிந்து கொள்ளுதல்.

# HTML படிவங்கள்

- HTML படிவ உறுபபுகளின் முக்கிய நோக்கம் பயனிரிடமிருந்து தரவுகளை சேகரிப்பதாகும்.
- இந்த தரவுகள் உரைப்பெட்டி, கீழ்வரிப்பெட்டி, ரேடியோ பொத்தான்கள் போன்ற HTML படிவ உறுப்புகள் மூலம் சேகரிககப்பட்டு சேவையக கணிப்பொறிக்கு PHP போன்ற சேவையக கணிப்பொறி நிரலாக்க மொழி கொண்டு அனுப்பப்படுகின்றன.

# HTML படிவ உறுப்புக்கள்

- **உரை உள்ளீடுகள்**: உரையானது உரைபெட்டி மற்றும் உரை பரப்பு மூலம் உள்ளீடு செய்யப்படும்.
- **பொத்தான்கள்**: Submit, Reset மற்றும் cancel பொத்தான்கள் மூலம் படிவத்தை கையாளுவதற்கு பயன்படுகிறது.
- **தேர்வுப்பெட்டி**: HTML படிவத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட மதிப்பினை தேர்ந்தெடுக்க பயன்படுகிறது.
- **ரேடியோபொத்தான்**: படிவத்தில் ஒரு நேரத்தில் ஒரு மதிப்பினைத்தான் தேர்வு செய்யமுடியும்.
- **கோப்பு தேர்ந்தெடுத்தல்**: பயனர் கணிப்பொறியிலிருந்து சேவையகக் கணிப்பொறிக்கு ஒரு கோப்பினைத் தேர்ந்தெடுத்து அனுப்புவதற்கு பயன்படுகிறது.
- **படிவ ஒட்டு**: படிவ ஒட்டுகள் மூலம் Post அல்லது GET வழிமுறைகளை குறிப்பிடவும், HTML ஆவணத்திலுள்ள அனைத்து படிவ உறுப்புக்களை கட்டுப்படுத்தவும் பயன்படுகின்றது.

# படிவத்தை கையாளும் வழிமுறைகள்

- HTML படிவ உறுப்புகளில் பயனர் உள்ளீடுகளை வழங்கி Submit பொத்தானை கிளிக்செய்யும் பொழுது, கோரிக்கை(Request) ஒன்று உருவாக்கப்பட்டு படிவ ஒட்டின் Action பண்புக்கூறில் உள்ள PHP கோப்பினை அடைகின்றது.
- அனைத்து உள்ளீட்டு மதிப்புகளும் ஒருங்கிணைக்கப்பட்டு Post அல்லது GET வழிமுறை மூலம் சேவையகத்திற்கு அனுப்பப்படுகின்றது.

# படிவத்தை கையாளும் வழிமுறைகள்

- **Post வழிமுறை:** Post வழிமுறை மூலம் சேவையகத்திற்கு அனுப்பப்படும் உள்ளீடு செய்யப்பட்ட தரவானது, பயனர் கணிப்பொறியின் HTTP request-னுடைய கோரிக்கை உடற்பகுதியில் (Request Body) சேமிக்கப்படுகிறது.
- **GET வழிமுறை:** URL முகவரி வழியாக உள்ளீடு செய்யப்படும் தரவானது சேவையகத்திற்கு அனுப்பப்படுகிறது. இதை வினவல் சரம் (query string) என்கிறோம். உள்ளீடு செய்யப்பட்ட தரவினை பயனர் Submit செய்த பிறகும் காண முடியும்.

# PHP ல் படிவத்தை செல்லுபடியாக்கல்

- செல்லுபடியாக்கல் (Validation) என்பது பயனரால், பயனர் கணிப்பொறியிலிருந்து உள்ளீடு செய்யப்பட்ட தரவுகளை சரிபார்க்கும் ஒரு செயலாகும்.
- PHP-ல் இரண்டு வகையான செல்லுபடியாக்கல் உள்ளது. அவை,
  - பயனர் கணிப்பொறி சார்ந்த செல்லுபடியாக்கல்
  - சேவையகக் கணிப்பொறி சார்ந்த செல்லுபடியாக்கல்

# பயனர் கணிப்பொறி சார்ந்த செல்லுபடியாக்கல் (client –Side Validation)

- உள்ளீடு செய்யப்பட்ட தரவுகள் பயனர் கணிப்பொறியின் வலை உலவியால் செல்லுபடியாக்கப்படுகின்றன.
- இதற்காக வலை உலவிகள் பயனர் கணிப்பொறி சார்ந்த ஸ்கிரிப்ட்களான ஜாவா ஸ்கிரிப்ட் (Java Script) அல்லது HTML-ன் Input ஒட்டிலுள்ள 'required' பண்புகூறினை பயன்படுத்திக் கொள்கின்றன.

# சேவையகக் கணிப்பொறி சார்ந்த செல்லுபடியாக்கல் (Server side validation)

- தரவினை சமர்பித்த பிறகு சேவையகக் கணிப்பொறியில் செல்லுப்படியாக்கல் செய்யப்படுகின்றது.
- இதற்காக சேவையகக் கணிப்பொறியிலுள்ள PHP, ASP அல்லது JSO போன்ற நிரலாக்க மொழிகள் பயன்படுத்தப்படுகின்றன.

# HTML ன் INPUT பண்புகூறுக்கான செல்லுபடியாக்கல் விதிமுறைகள்

| | |
|---|---|
| Name (Text Input) | எழுத்துருக்களையும், வெற்று இடைவெளிகளையும் கட்டாயமாக கொண்டிருக்க வேண்டும் |
| Email (Text Input) | @ மற்றும் .string (சாரங்களை) கட்டாயமாக கொண்டிருக்க வேண்டும் |
| Webside (Text Input) | கட்டாயமாக சரியான URL லை ஏற்க வேண்டும் |
| Radio | குறைந்தபட்சம் மதிப்பினை தேர்ந்தெடுக்க வேண்டும் |
| Check box | குறைந்தபட்சம் ஒரு மதிப்பினை தேர்ந்தெடுக்க வேண்டும் |
| Drop Down menu | குறைந்தபட்சம் ஒரு மதிப்பினை தேர்ந்தெடுக்க வேண்டும் |

# PHP இல் கோப்பு கையாளுதல் செயல்பாடுகள்

- PHP கோப்பினை திறத்தல்
- PHP கோப்பினை படித்தல்
- PHP கோப்பினை மூடுதல்
- PHP கோப்பில் எழுதுதல்
- PHP கோப்பினை சேர்த்தல்
- PHP கோப்பினை பதிவேற்றம் செய்தல்

# PHP கோப்பினை திறத்தல்

- **fopen() செயற்கூறானது சேவையகத்திலுள்ள ஒரு கோப்பினை திறக்க உதவுகிறது.**

| கட்டளை அமைப்பு |
| --- |
| $file_Object= fopen("FileName", "Read/ WriteMode") or die("Error Message!"); |

**எடுத்துக்காட்டு**

```
<?php
$myfile = fopen("Student. txt", "r")
or die("Unable to open file!");
?>
```

# PHP கோப்பினை படித்தல்

- **fread() செயற்கூறு திறந்துள்ள கோப்பிலிருந்து படிக்க உதவுகின்றது.**

| கட்டளை அமைப்பு |
| --- |
| fread($file_Object,filesize("FileName")); |

**எடுத்துக்காட்டு**

```
<?php
fread($myfile,filesize("Student.txt"));
?>
```

# PHP கோப்பினை மூடுதல்

- **fclose()** செயற்கூறானது திறக்கப்பட்ட ஒரு கோப்பினை மூடுவதற்கு உதவுகின்றது.

| கட்டளை அமைப்பு |
| --- |
| fclose($file_Object); |

**எடுத்துக்காட்டு**

```
<?php
$myfile = fopen(“student.txt”, “r”);
// some code to be executed....
fclose($myfile);
?>
```

# PHP கோப்பில் எழுதுதல்

- **fwrite() செயற்கூறானது கோப்பில் எழுத உதவுகிறது.**

| கட்டளை அமைப்பு |
|---|
| fwrite($myfile, $txt); |

# மதிப்பீடு

1. HTML படிவங்கள் எதற்குப் பயன்படுகிறது?
   அ) **<u>பயனரிடமிருந்து உள்ளீடுகளைப் பெறுவதற்கு</u>**
   ஆ) சேவையகம் சார்ந்த நிரலாக்க மொழியை உருவாக்குவதற்கு
   இ) ஒரு தரவுத்தளத்தை உருவாக்குவதற்கு
   ஈ) மின்னஞ்சல்களை அனுப்புவதற்கு
2. கீழ்க்கண்டவற்றில் எது HTML படிவக் கட்டுப்பாட்டு உறுப்பு கல்ல?
   அ) உரை உள்ளீடுகள் ஆ) பொத்தான்கள்
   இ) தேர்வுப் பெட்டிகள் ஈ) **<u>கிராப்பிங் டூல்</u>**
3. HTML படிவம் உருவாக்கப் பயன்படும் ஒட்டு எது?
   அ) **<u>form</u>** ஆ) input இ) textarea ஈ) select
4. எந்த படிவக் கட்டுப்பாடு பயனரை பல மதிப்புகளைத் தேர்ந்தெடுக்க அனுமதிக்கிறது?
   அ) உரை உள்ளீடுகள் ஆ) பொத்தான்கள்
   இ **<u>தேர்வு பெட்டிகள்</u>** ஈ) ரேடியோ பொத்தான்கள்
5. எந்த படிவக் கட்டுப்பாடு பயனரை ஒரு நேரத்தில் ஒரு மதிப்பை மட்டுமே தேர்ந்தெடுக்க அனுமதிக்கிறது?
   (அ) உரை உள்ளீடுகள் ஆ) பொத்தான்கள்
   இ) தேர்வு பெட்டிகள் ஈ) **<u>ரேடியோ பொத்தான்கள்</u>**

# மதிப்பீடு

6. PHP இல் செல்லுபடியாக்கலின் நோக்கம் என்ன?

   அ) **பயனர் கணிப்பொறியில் இருந்து சமர்பிக்கப்படும் தரவுகளை சரிபார்க்க**

   ஆ) பயனர்களுக்கு தரவுகளைக் காண்பிக்க

   இ) சேவையகத்தில் தரவுகளை சேமிக்க

   ஈ) கிளையன்ட்க்கு தரவுகளை அனுப்ப

7. PHP இல் எத்தனை வகையான செல்லுபடியாக்கல் உள்ளன?

   அ) ஒன்று ஆ) **இரண்டு** இ) மூன்று ஈ) நான்கு

8. PHPஇல் ஒரு கோப்பைத் திறப்பதற்கு எந்த செயற்கூறு பயன்படுத்தப்படுகிறது?

   அ) **fopen()** ஆ) fread() இ) fclose() ஈ) fwrite()

9. PHP இல் ஒரு கோப்பை படிப்பதற்கு எந்த செயற்கூறு பயன்படுத்தப்படுகிறது?

   அ) fopen) ஆ) **fread()** இ) fclose() ஈ) fwrite()

10. PHP இல் ஒரு கோப்பை மூடுவதற்கு எந்த செயற்கூறு பயன்படுத்தப்படுகிறது?

    அ) fopen() ஆ) fread() இ) **fclose()** ஈ) fwrite()

# முக்கிய வினாக்கள்

1. **PHP மற்றும் HTML படிவக் கட்டுப்பாடுகளின் முக்கிய நோக்கம் என்ன?**
2. **அடிப்படை HTML படிவக் கட்டுப்பாடுகள் என்னென்ன உள்ளன?**
3. **HTML படிவக் கட்டுப்பாடுகள் மூலம் தரவு எவ்வாறு சேவையகத்திற்கு அனுப்பப்படுகிறது?**
4. **PHP ல் படிவத்தை செல்லுபடியாக்கல் என்றால் என்ன?**
5. **PHP ல் உள்ள 2 வகையான செல்லுபடியாக்கல் என்ன?**
6. **PHP ஐப் பயன்படுத்தி செய்யக்கூடிய பல்வேறு கோப்பு கையாளுதல் பணிகள் யாவை?**
7. **PHP இல் கோப்பு கையாளுதல் செயல்பாடுகளை விரிவாக விளக்குக.**

# நன்றி!



J. Kavitha B.Sc.,B.Ed.,M.C.A.,M.Phil.,
Computer Instructor Gr-1
GHSS, Sarkarsamakulam
Coimbatore - 641107.

**நம்பிக்கை கை விட்டாலும் நீ கற்ற கல்வி என்றும் உன்னை கை விடாது.**

**அக்கல்வியைப் பெற்று சிறப்போடு வாழ**

வாழ்த்துக்கள்.